SABAPATHI—Tit Bits

IN TAMIL

BY

P. SAMBANDAM, B.A., B.L.,

AUTHOR OF

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The Fair Ghost, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathi Part II A Rehearsal or Sabapathi Part III, Sabapathi Part IV, Mixture, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgen Generals Prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Haris-Chandra, Blind Ambition, Markandeva, Saragadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years before the Footlights Parts I, II, III, IV, V & VI, The Search, Srince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunta Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama, Humorous Essays, A hand-Book for Tamil Talkies, Strav Flowers, The Wedding of Valli, Talkie Experiences, The Dead revived, Asthanapura Dramatic Company, Music-mad, Sabapathi-Zamindar, The Nine Playlets, A Little Spark of Fire, Art *vs* Love, Deepavali Varisai, Hitler *vs* Indian, Siva Shrines Parts I, II, III, IV, & V Subramania shrines, Home-rule, and Sivai Temple architecture etc. in Tamil.

FIRST EDITION

PRINTED AT THE ARUTPERUNJOTHI PRESS,

7/99, AMMAN COIL STREET, G. T., MADRAS—1.

All rights reserved] 1949 [*Price As.*

சபாபதி - துணுக்குகள்

நாடகப்பேராசிரியார்

ப. சம்பந்த முதலியார், *பி.ஏ., பி.எல்.,*

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள்.—

லீலாவதி—சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுதரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனை, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், ஸஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தானபேட்டை சப் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள்—ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னாவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி?, ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காக்ஷி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும் ஐந்து பாகங்கள், சிவாலய சிற்பங்கள், மனையாட்சி, தீபாவளி வரிசை, இந்தியனும் ஹிட்லரும், காலக் குறிப்புகள், சுப்ரமண்ய ஆலயங்கள், தீயின் சிறு திவலை, கலையோ காதலோ? உணவுப் பொருள்களின் குணங்கள், முதலியன.

முதற் பதிப்பு

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1.

காபிரைட்] 1949 [விலை அணா

Inscribed

to

The Beloved Memory

of

My Parents

P. VIJAYARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

My Friend

C .RANGAVADIVELU

முகவுரை

இந்தக் காட்சிகள், "சபாபதி" நாடகமானது பேசும் படமாகக காட்டியபோது, என்னால் எழுதப்பட்டவை. "சபாபதியின்" நண்பர்கள் இதைப் படிக்கவும், நடிக்கவும் விரும்புவாரகளென்று நம்பி இவைகளை அச்சிடலானேன்.

இவைகளிலும், நான் இதுவரையில் அச்சிட்டிருக்கும் எல்லா நாடகங்களிலும், உள்ள பாத்திரங்கள், ஒருவரையும் குறிப்பனவல்ல என்று எல்லோரும் அறிவாரகளாக.

இக்காட்சிகளை நடிப்பதற்கும் என் அனுமதி வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ப. சம்பந்தம்

சபாபதி - துணுக்குகள்

I—"சபாபதியும்—தமிழ் வாத்தியாரும்"

ஓர் காட்சி

இடம்—தமிழ் வாத்தியார் வகுப்பு அறை.

வகுப்புப் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். சபாபதி முதலியார் ஓர் தமிழ் புத்தகத்தினின்றும், 4 பக்கங்களைக் கிழித்துக்கொண்டிருக்கிறார். மூருகேசம் வாத்தியார் மேஜையைத்திறந்து அதில் ஒரு பூனைக் குட்டியை விடுகிறார்.

வேலைக்கார சபாபதி விரைந்து வருகிறான்.

வே-ச. அப்பாப்பா! தமிழ் வாத்தியாரு-சந்து திரும்பூட்டாரப்பா!

ச-மு பசங்களா!—கப்சப்! ஒண்ணும் சொல்லாதைங்க! சீக்கிரம் சீக்கிரம்! — மூக்குக் கண்ணாடியே யெடுத்து ஒளிச்சிவைச்சுடுங்க—(வேலைக்கார சபாபதி அதைத் தன் ஜேபியில் போட்டுக்கொள்கிறான். பிள்ளைகளெல்லாம் உட்கார்ந்து ஏதோ படிப்பதுபோல பாசாங்கு செய்கின்றனர்; வே. சபாபதி வெளியே போகிறான்)

சின்னசாமி வாத்தியார் மெல்ல வருகிறார்.

சி. அதாம் நல்ல பிள்ளைகளுக்கு அடையாளம்!—கூச்சல் கீச்சல் போடாதே—பாடத்தே படிச்சிகினு இருக்குதுங்க. (மேஜைக்குள் கூச்சல்) அதென்னப்பா! பூனேயோ—நாயோ—எங்கையோ கத்துது.

ச-மு. இங்கே ஒண்ணுமில்லெ சாமி.

சி. எனக்கு என்னமோ சத்தம் கேட்குது. (உட்கார்ந்து மேஜையைத் திறக்க பூனைக்குட்டி அதிலிருந்து வெளியே ஓடுகிறது) அப்பா! பிள்ளைகளா! உங்களே ஒண்ணு கேட்கிறேன். நீங்க என்ன ஒண்ணும்ணாலும் குறும்பு— பண்ணுங்க—கூச்சல்—சத்தம்—மாத்திரம் போடாதைங்க — போன வாரம் 'என் கிளாஸ்லே கூச்சல் அதிகமா யிருந்ததுண்ணு — பின்னாங் கொட்டே தொரே (Penington!) எனக்கு ஒரு ரூபா

அபராதம் போட்டாரு — இந்த பூனே குட்டி இதுக்குள்ளே என்னமா வந்தது! யாரப்பா—சபாபதி உன் வேலேயோ!

ச-மு. என்னசாமி! எம்பேர்லெ வீண் பழி போடறைங்க!— அந்த பூனேகுட்டியே நானு வெரலாலேகூட தீண்டலே சாமி! உங்கப்பாணே!

சி. சரி! போனு போறது—பாடம் ஆரம்பிப்போம்— இண்ணேக்கி என்ன பாடம்?—முருகேசம்.

மு. Tamil Prose சாமி — வசனம்; திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திருமணத் திருப் படலம்.

சி. திருஞானசம்பந்த ஸ்வாமிகள் திருமணப் படலம் என்று சொல் தம்பி—எங்கே என் மூக்குக்கண்ணடி? அப்பேன் தம்பிங்களா—நீங்கல்லாம் ரொம்ப நல்ல பிள்ளேங்களாச்சே! அதெ கொஞ்சம் கொடுத்தாடுங்க —இல்லாபோனு நான் பாடம்படிக்க முடியாது.

(சபாபதி முதலியார் ஜாடை செய்ய
வே. சபாபதி வெளியிலிருந்து உள்ளேவருகிருன்)

வே-ச. ஐயா! தமிழ் வாத்தியாரே—இது உங்க மூக்கு கண்ணடியா பாருங்க!

சி. ஆமாண்டாப்பா! (வாங்கிக்கொண்டு) இது உங் கையிலே எப்படி ஆப்பிட்டுது?

ச. இல்லே சாமி — இது—உம் — கொஞ்சம் முன்னே, இங்கே யிருந்து ஒரு பூனே ஓடியாந்தது வெளியே— என்னண்ணு பாத்தா—அதும் மூக்குலே — இந்த கண்ணடியே போட்டுகினு இருந்தது. நம்ப—அப்பா தமிழ் வாத்தியாருது ஆச்சே—இண்ணுநானு ஓடிப் போய் புடிங்கினு வந்தாட்டேன்.

(மூச்சு இறைப்பதுபோல் பாசாங்குசெய்கிருன்)

சி. அந்தமட்டும் ஆப்பிட்டுதே! அடே அப்பா, நீ ரொம்ப நல்லவன்—நீ வெளியே போயி உககாந்துகினு இரு. (கண்ணடியைப் போட்டுக்கொண்டு தமிழ் புஸ்தகத்தைப் பிரித்து) முருகேசம்—வெள்ளிக்கிழமை எங்கே பாடம் நிறுத்தினேன்?

ச-மு. அவனுக்கு ஞாபகம் இருக்காது சாமி—நான் சொல்லரே. (தன் புஸ்தகத்தைப் பார்த்துப் படிக்கிறான்) "திருஞானசம்பந்த ஸ்வாமிகள் மணப் பந்தலிலே வந்தார்" வரைக்கும் படிச்சிங்கோ — அதுக்கு அர்த்தம் மாத்திரம் சொல்லலே—18 ஆவது பக்கம் கடைசி வரி பாருங்க.

சி. ஆமாம். சபாபதி நீ நல்லபிள்ளே — உனக்கு நல்ல ஞாபகம் இருக்குது. உம் (புஸ்தகத்தைப் பிரித்து) திருஞானசம்பந்த ஸ்வாமிகள் — திருஞான சம்பந்த ஸ்வாமிகள்—மணப் பந்தலிலே — மணப் பந்தலிலே வந்தார்—வந்தார் ! (படிக்கிறார்) பிறகு அனுமார்—அனுமார்—சமுத்திரத்தை ஒரே—என்னடாப்பா இது! என் கண்ணு மங்கலா யிருக்குதா என்ன? தம்பி சபாபதி நீ படி.

ச-மு. அப்படியே சாமி! (படிக்கிறான்) திருஞானசம்பந்த ஸ்வாமிகள் மண்டபத்தில் வந்தார்—பிறகு அனுமார் சமுத்திரத்தை ஒரே தாண்டாகத் தாண்டி இலங்கையில் குதித்தார்! (பிள்ளைகளெல்லாம் பெரும் நகைப்பு நகைக்கிறார்கள்)

பெனிங்க்டன் துரை வருகிறார்.

பெ-து. What is all this noise about ? (all are silent) Here boy, come here (beckens to S Mudaliar who goes near him) Ask the Tamil teacher why he allowed the class to be so noisy ?

ச-மு. சாமி—தொரே கேக்கராருங்க. இந்த கிளாஸ்லே ஏன் இவ்வளவு கூச்சலா யிருககுது இண்ணு ?

சி. அப்பேன்—அவருக்கு மொள்ளமா சொல்லு—இந்த பாடப் புஸ்தகத்தலே — நூலாசிரியர் — அவ்வளவு ரசமா எழுதி யிருக்கரார்—அதாவது சிரிப்புண்டாகும் படியா.

ச-மு. Teacher says-This author has written very funnily.

P. I dont believe it—let me see—You just translate. what is there

ச-மு Yes sir — Thirugnana Sambandaswami — arrived —marriage pandal—and Hanuman jumped acrow the ocean

P. What is there to laugh at this? Tell your teacher that I feel that he is unable to keep his class in order —The next time I find this class noisy I will stop a big slice of his pay.

(கோபத்துடன் போகிருர்)

சி. என்ன தம்பி—என்னமோ—பே—இண்ணு சொன்ஞரே.

ச-மு. Pay இண்ணு சம்பளம் சாமி—உங்க வாத்தியாரு ரொம்ப நண்ணு பாடம் சொல்லிக் கொடுக்கராரு—பசங்கல்லாம் சிரிச்சிகினே இருக்கும்படி-அதொட்டு—அவர் சமபளத்தே வர்ர மாசம் ஒஸ்தலாம் இண்ணு இருக்கிறேன்—இண்ணு சொன்ஞரு.

சி. அப்பா! ரொம்ப சந்தோஷம்—என் வயத்துலே பாலே வார்த்தே. தம்பிகளே—தொரே பூட்டாரா பாருங்கோ?

ச-மு. அவர் அப்பலே மெத்தைக்கு பூட்டாரு சாமி.

சி. ஆனல்—இண்ணைக்கி கொஞ்சம் வெய்யல் அதிகம்—அதிலே நடந்து வந்ததுலே—ஒடம்பெல்லாம் ஓய்ச்சலாயிருக்குது. நான் கொஞ்சம் ஓய்வு எடுத்துகரேன். நீங்கல்லாம ஏதாவது கூச்சபோடாமே—படிச்சிகினு இருங்க—விளையாடிஞலும் விளையாடுங்க—கூச்சல் மாத்திரம் போடாதைங்க.

(பிள்ளைகள்) அப்படியே சாமி.

சி. கூச்சல் மாத்திரம் வேணும்—நான் தூங்கலே—சும்மா கண்ணே மூடிகினு—எளப்பாறரேன். (தூங்குகிருர்—உடனே பிள்ளைகள் அவர் தலைகுட்டையில் ஒரு கயிற்றைக்கட்டி, அதன் முனையை பின்னல் இருக்கும் ஓர் ஆணியில் கட்டிவிடுகின்றனர்.)

சபாபதி முதலியார் வெளியே போய் பெனிங்டன் துரை குரலில "சின்னசாமி! சின்னசாமி!"—என்று அழைக்கிருர்.

(முருகேசம்) வாத்தியார்! வாத்தியார்! தொரே உங்களே கூப்பிடரார்!

(சின்னசாமி முதலியார், விழித்து வெளியே விரைந்து போகிருர், தலைகுட்டை அவிழ்ந்துகொண்டு போகிறது. பிள்ளைகள் எல்லாம் சிரிக்கின்றனர்.)

காட்சி முடிகிறது.

II

"சின்னசாமி வாத்தியாரும்—கன்னியம்மாளும்"

இடம்—சின்னசாமி வாத்தியார் வீடு.

கன்னியம்மாள் வருகிருள்

க. (பலகணி வழியாக வெளியே பார்த்து) அதோ வருது கெழம்! இண்ணைக்கி எப்படியாவது அந்த பேசரு வாங்கி கொடுக்கப்போரு பாரு!

(கட்டிலின்மீது படுத்துக்கொண்டு, போர்வை யைப் போர்த்திக்கொள்ளுகிருள்)

சின்னசாமி முதலியார் மெல்ல வருகிருர்.

சி. கன்னி!—கன்னி!—கண்ணு!—கண்ணு!

க. (படுக்கையிலிருந்து) கண்ணும்—மண்ணும்!

சி. ஓ!—படுக்கையிலேயா படுத்துகினு இருக்கரே—சாயங் காலத்திலே நாங்கக் கூடாதிண்ணு தேரையர் எழுதி யிருக்கிருரே!

க. அவர் எழுதியிருந்தா—அத்தெ கிழிச்சி போடுங்க!— எனக்கு ஒடம்பு காலமே புடிச்சி, சரியாயில்லே.

சி. என்ன ஒடம்பு உனக்கு?

க. காலமே புடிச்சி காய்ச்சல்.

சி. (அவள் கையைத் தொட்டு பார்த்து) ஊம்—ஒடம்பு— ஒண்ணும் சுடக் காணமே.

க. ஜொரம் நிண்ணு போச்சி—தலே நோவு பொளந்து போவுது!

சி. ஊம்—சரி—(கதவண்டை போய்) அப்பா! தட்டான்! அம்மாளுக்கு இண்ணைக்கி ஒடம்பு சரியாயில்லே— நாளைக்கி கொண்டுவா—அதும்பேரென்ன-பேஜாரா?

க. (திடீரென்று படுக்கையிலிருந்து குதித்து எழுந்து) பேசர்! பேசர்!—தட்டான் கொண்டாந்திருக்கருரா என்ன? எங்கே எங்கே!

சி. கன்னி! இப்போ அந்த தலேநோவெல்லாம் எங்கே போச்சி?

க. (வெளியில் பார்த்து) தட்டானுமில்லே, ஒருத்தரையுங் காணுமே. என்னே—ஏமாத்தரைங்களா இப்படி?

சி. நீ மாத்திரம் ஏமாத்தலாமோ என்னே? ஜொரமிண்ணும் தலே நோவு இண்ணும்?

க. ஆவட்டும்! ஆவட்டும்! எனக்கும் தெரியும்.

சி. கன்னி! நீ நல்ல கண்ணுச்சே! எம்பேர்லே கோவிச்சிக்காதே. நானு என்ன செய்யரது? எனக்கோ கொஞ்ச சம்பளம்.—

க. அதுக்கேன் என்னே ரெண்டாந்தாரம் கட்டிகனிங்க? சும்மா இருக்கிறதுதானே?

சி. அது எம்பேர்லே தப்புதான் — நான் சொல்ரத்தே கேளு—எங்க ஸ்கூல் தொரே — எனக்கு சம்பளம் ஒஸ்தரேன் இண்ணு சொல்லியிருக்காரு.

க. இப்படிதான் ஒரு வருஷமா சொல்லிக்கினு இருக்கரைங்க—ஒருவேளே போன மாசம் பைன் போட்டாரே—அந்த மாதிரி ஒசருதோ என்னமோ !

சி. நீ கோவிச்சிக்காதே ! அது இல்லாமெ போனும் —நம்ப——ஜமீன்தார் மாணிக்க முதலியார் புள்ளே —சபாபதிக்கு கல்யாணம் சீக்கிரம் ஆவும்போலே இருக்குது. பொண்ணு ஊட்டுகாருகூட புள்ளெயாண்டானெ பாக்கவந்தாங்க இண்ணைக்கி — கலியாணமானு—எனக்கு வேஷ்டிகீஷ்டிக்கி பதில், ஒனக்கு—அதும்பெரென்ற—பேஜாரா—அதுவாங்கிகொடுக்க சொல்லரேன்.

க. சரிதான் — அவங்ககிட்ட போயி, பேஜார் வோணுமிண்ணு சொல்லப் போரைங்க — பேசர் இன்னு சொல்லுங்க.

சி. அப்படியே ஆவட்டும்—ஊம்—இந்தா—இந்த தலே குட்டையே அந்த தலேப்பா தூக்குலே மாட்டு.

க. (அதை வாங்கிப் பார்த்து) இதுலே என்ன — என்னமோ காயித துண்டுங்க இருக்குதே—என்னமோ—குப் குப் !—இண்ணு எழுதி யிருக்குதே?

சி. அதுவா—அது—நான் வர்ர வழியிலே ஒரு ஜோசியனே பாத்து கேட்டேன் — நமக்கு எப்போ சுக்கர தெசெவருமிண்ணு—அவன் எல்லாம் கணக்குபோட்டு பார்த்து — இப்போ சனி தெசையிலே யிருக்குது—அது போனு தான் சுக்கர தெசெ திரும்பும் இண்ணு

சொல்லி—அந்த சனி தெசே சீக்கிரம் போவருத்துக் காக—ஏதோ காகிதத்துலே மந்திரம் எழுதி கொடுத்தான்—அத்தே என் தலைப்பாகை யிலே வைச்சிக்கினு வந்தேன்—அதுவா யிருக்கும்.

க. என்னமோ துண்டு துண்டா யிருக்குதே?

சி. அது வெவ்வேறெ மந்திரங்க எழுதியிருப்பான். இந்தா — அப்படியே — எனக்கு காப்பி சீக்கிரம் கொண்டா.

க. (தலைப்பாகையை தூக்கில் மாட்டிவிட்டு) இண்ணைக்கி காப்பி யில்லே — தேத்தண்ணி தாம் பண்ணியிருக்கிறேன்.

சி. கொண்டா சீக்கிரம் அதையாவது—எளப்பா யிருக்குது.

(கன்னி உள்ளே போகிறாள்)

சி. அந்த மட்டும் அவகிட்டே நெஜத்தே சொல்லாதே தப்பிச்சிககினேனே! (உட்காருகிறார்)

கன்னி இரண்டு லோட்டாக்களைக் கொண்டுவந்து மேஜையின்பேரில் வைக்கிறாள்.

சி. (ஒன்றை எடுத்து) என்னா இதிலே ஒண்ணுமில்லேயே?

க. நல்ல சாலேசரம் வந்தது! அந்த டம்ளர்லே இருக்குது.

சி. ஓ!—என்னா! கறுப்பா யிருக்குதே!

க. பாலு கொஞ்சம்தா இருந்தது—அதுலே வெளுக்கலே.

சி. அந்தமட்டும் இதுவாவது கெடைச்சுதே—என்னா கன்னி! தேத் தண்ணியா யிது—ரசம்போலே இருக்குதே.

க. ரசம் தான்! (சிரிக்கிறாள்)

சி. ஏண்டி—என்னே அப்படி ஏமாத்தலாமா?

க. நீங்கமாத்திரம் என்னே தட்டான் பேசர் கொண்டாந்தாண்ணு ஏமாத்தலாமா?

சி. சரி! அதுக்கும் இதுக்கும் சரியாபோச்சி — யாரோ கதவெ தட்டராங்க பாரு.

க. (கதவண்டை போய்) யார் அது?

வே. சபாபதி (வெளியிலிருந்து) தமிழ் வாத்தியாரு இருக்காங்களா அம்மா, ஊட்லே.

க. இருக்காரு (கதவைத் திறக்கிறாள்)

வேலைக்கார சபாபதி ஒரு பெரிய கவரை எடுத்துககொண்டு வருகிறான்.

ச. சாமி! இந்தாங்க இந்த காகிதங்கல்லாம் — ஒங்களே சேர்ந்ததாம்—ஒங்ககிட்ட கொடுத்தூட்டு வரசொன் ஒரு அப்பா (கொடுக்கிறான்) வர்ரேங்க (வெளியில் கதவண்டை போய் ஒளிந்து பார்க்கிறான்)

சி. கன்னி! என்ன காயிதம் — பிரிச்சிப் பாரு — என்ன மாறு கண்ணாலெ சமாசாரமா யிருக்கும்.

க. (பிரிக்க அதிலிருந்து பல காகிதத் துண்டுகள் விழுகின்றன. அவைகளில் இரண்டை எடுத்துப்பார்த்து) குப் குப்!—குப்குப்—இது என்ன சமாசாரம்—

சி. அது—அது—அது—

ச. (கதவண்டை யிருந்து) ரெயில் சமாசாரம்! (என்று கூறிவிட்டு மறைகிறான்; கன்னி கோபத்துடன் தன் கணவனைப்.பார்க்கிறாள்)

(காட்சி முடிகிறது)

III

வேலைக்கார சபாபதியும், சிவகாமுவும் சந்திப்பது.

இடம்—சபாபதி முதலியார் வீட்டின் பின்கட்டில் ஓர் அறை.

சபாபதி உலாவிக் கொண்டிருக்கிறான.

ச. சிவகாமு! சிவகாமு!

சிவகாமு வருகிறாள்.

சி. ஏங் கூப்டைங்க—என்னே ?

ச. சும்மா—கூப்டேன்.

சி. ஊம்! (கோபத்துடன் திரும்பிப் போகப் பார்க்கிறாள்)

ச. சிவகாமு—இங்கே வாயேன்—உன்னே ஒரு கேள்வி கேககட்டுமா ?

சி. என்னு கேக்கப் போரைங்க?

ச. வேறொண்ணுமில்லே—அண்ணேக்கி—எங்க ஊட்டுக்கு வந்தையே—உன் எஜமானியோடே அண்ணேக்கி — என்னே ஏன் சும்மா—உத்து உத்து பாத்தே?

சி. ஓ! நான் பார்க்கவே யில்லே—நீங்கதான்—என்னே உத்து உத்து பாத்தைங்க.

ச. அண்ணேக்கி என்னெ பாத்து நீ சிரிக்கலே?

சி. ஓகோ! இல்லவே இல்லெ—நீங்கதான் என்னெபாத்து சிரிச்சைங்க. நீங்க இருந்த பககம் கூட—நானு திரும்பவே யில்லேயே.

ச. அப்படியானு — நானு உன்னே உத்து பாத்து— சிரிச்சது, எல்லாம் உனக்கு எப்படி தெரிஞ்சுது?

சி. அதெல்லாம் சொல்ல மாட்டேன் — நான் ஊட்டுக் குள்ளே போறேன்.

ச. இன்னம்—ஒரே சமாசாரம்.

சி. என்னு—சீக்கிரம் கேளுங்க.

ச. உங்க எஜமானி பொண்ணுக்கும்—எங்கஐயா புள்ளேக் கும் சீக்கிரம கண்ணாலம ஆவப்போவுது—உனக்கு தெரியுமா?

சி. தெரியும்—ஏன் சிரிக்கரைங்களே—

ச. வேறொண்ணுக்குமில்லே—அப்பவே—எனக்கும் கண் ணலம் ஆவப்போவுது (சிரிககிருன்)

சி. இத்தெ சொல்லவா—கூப்பிட்டைங்க! நான் வர்ரேன் (போகப் பார்க்கிருள்)

ச. சிவகாமு — இங்கேவா — கோவிச்சிக்காதே — என் கண்ணலத்துககு—நீ வரமாட்டே?

சி. உம்—உம்—நான் என்னத்துக்கு வர்ரது?

ச. கண்ணல—பொண்ணு—வாயேன்?

[கோபத்துடன் போகிறவள் திடீரென்று திரும்பிப் பார்த்து புன்னகை செய்கிருள்— சபாபதி நகைக்கிருன்]

(காட்சி முடிகிறது)

சபாபதி முதலியார் பாடம் கற்றது.

இடம்—சபாபதி முதலியார் வீட்டில் ஓர் அறை.

ஒரு பக்கம் வெராண்டாவுக்குப் போகும் வழி.

மற்றொரு பக்கம் இரண்டு சிறு அறைகள் திரைகளால் மூடப்பட்டிருக்கின்றன. நடுவில் ஒரு மேஜை; அதன் பேரில் புத்தகங்கள் முதலியன வைக்கப்பட்டிருக்கின்றன.

சபாபதி முதலியார் ஒரு பக்கம் உட்கார்ந்திருக்கிறார். ஞானம்பாள் அவருக்கு எதிராக உட்கார்ந்திருக்கிறாள்.

ஞா. நீங்க மத்த Subjects லே எல்லாம் மினிமம் (Minimum) வாங்கி யிருக்கரைங்க—மாதமேடிக்ஸ் (Mathematics) லே தான் ரொம்ப poor மார்க்ஸ் வாங்கி யிருக்கரைங்க—Arithmetic ரொம்ப poor-கொஞ்சம் கஷ்டப் பட்டு—நான் சொல்லிக் கொடுக்கரேன்—படிச்சுடுங்க—எப்படியும் நீங்க பாஸ் பண்ணிடுவைங்க—இந்த வருஷம்.

ச-மு. Mathematic Paper ரெ—துட்டு கொடுத்து முன்னெலே வாங்கிக்க முடியாதோ?

ஞா. அதெல்லாம் முடியாது—போன வருஷம் paper out ஆயிட்டுது இண்ணு. இந்த வருஷம் Examiners ரொம்ப Strict ஆ இருக்கராங்க. இந்த வருஷம்—எங்க ஸ்கூல் Head-master தான் paper set பண்ணராராம்—அவரு எப்படியும் இரண்டு மூணு fraction sums கொடுப்பாரு—அத்தையெல்லாம் உங்களுக்கு சொல்லிக் கொடுக்கரேன்—

(வேலைக்கார சபாபதி ஓடிவருகிறான்)

வே-ச. அப்பாப்பா! பெரிய எசமான் வர்ராரு! வர்ராரு!—அண்ணி! ஒளிச்சிக்க! ஒளிச்சிக்க! (ஞானம்பாள் ஒரு பக்கம் இருக்கும் சிறு அறையில் ஒளிந்துகொள்கிறாள்—வேலைக்கார சபாபதி மற்றொரு அறையில் ஒளிந்து கொள்கிறான்).

ச-மு. (குருட்டுப் பாடம் செய்வதுபோல) $(a+b)^2$ is equal to $a^2+2ab+b^2$ (இதை திருப்பித் திருப்பி ஒப்பித்துக்கொண் டிருக்கிறான்)

சபாபதியின் தகப்பனார் மாணிக்க முதலியார் வெராண்டா பக்கமிருந்து வருகிறார்.

மா. ஏண்டாபேன்? அவ்வளவு சொல்லியும்—

சு-மு. என்ன ஆயின?

மா. எங்கேடா ஞானம்பாள்?

சு-மு. இங்கே வந்ததா என்ன?—நான் study பண்ணிகின இருந்ததிலே கவனிக்கலே.

மா. எங்கே பூட்டுது?—கொரல் கண்ணு கேட்டுது எனக்கு—என்ன ஆச்சர்யம்!—ஓ! இங்கே ஒளிசசிகின இருக்கராப் போலே இருககுது—(ஞானம்பாள் ஒளிந்திருக்கும் அறைக்குப் போகப் போகும்போது—இதைக கண்ட வேலைக்கார சபாபதி தும்புவதுபோல் பாசாங்கு செய்கிறான். தகப்பனார் அவனிருக்கும் அறைபக்கம் போய்) ஏம்மா? அவ்வளவு சொல்லியும் அவன் படிக்கும்போது வந்து Disturb பண்ணரையே!—உங்கப்பா பக்கத்து வீட்டே வாங்கிக் கொடுத்தாலும் கொடுத்தாரு—உனக்கு எல்லாம் சொலபமா போச்சு! (இச்சமயம் சபாபதி முதலியார் சைகை செய்ய, ஞானம்பாள் மெல்ல தெரியாதபடி வெளியே போய்விடுகிறாள்) வா அம்மா—வா—நான்தான் கண்டு புடிச்சூட்டேனே. (திரையைத் தள்ள, வேலையாள் சபாபதி வருகிறான்) அடே! நீயா இங்கே இருந்தே! நீ என்னடா செய்யரே இங்கே?

வே-சு பெரிய ஐயா!— அப்பா படிக்கும்போது அண்ணி வரக்கூடாது திண்ணைங்களே இண்ணு——அவுங்க வராதெ இருக்கிறபடி பாத்துகின இருந்தேன் இங்கே—ரகசியமா—

மா. ஊம்!—குரல்—கண்ணு கேட்டுது—

சு. நானு ஒரக்க படிச்சிகின இருந்தனே — அதுவாயிருக்கலாம்.

மா. இருக்கலாம்—சரிதான். அடே சபாபதி—என்காரே, இந்தப் பக்கம் கொண்டு வரச்சொல்—

(வேலைக்கார சபாபதி போகிறான்)

அப்பா, உன் நன்மைக்காகத் தான் சொல்ரேன்—எப்படியாவது கஷ்டப்பட்டு இந்த வருஷமாவது பாஸ் பண்ணிவிடப்பா. (போகிறார்)

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்—அதேயிடம் சபாபதி முதலியார் உட்கார்ந்திருக்கிறார்.

வே. சபாபதி ஞானம்பாளுடன் வருகிறான்.

வே-ச. நீங்க வாங்க அண்ணி—ஒண்ணும் பயமே இல்லே, பெரிய ஐயா கிளப்புக்கு பூட்டாரு—சீட்டாட—எட்டு மணிக்கிதான் வருவாரு.

ஞா. (சபாபதி முதலியார் பக்கத்தில் உட்கார்ந்து) எனக்கு என்னமோ பயமா யிருக்குது. இண்ணைக்கி ஒரு சம் (sum) மாத்திரம் சொல்லிக் கொடுக்கறேன்—மற்றது அப்புறம் பார்த்துக்கலாம் — மிஸ்டேவி எப்படியும் clock sum கொடுப்பாங்க—அதிலே principle என்னு ண்ணு --

ச-மு. (சிரிக்கிறார்)

ஞா. என்னு சிரிக்கரைங்களே ?

ச-மு. ஒண்ணுமில்லே—அப்பா ஏமாந்ததெ நெனைச்சுகினு சிரிப்புவருது.

வே-ச. எனக்குகூட சிரிப்பு!—(சிரித்துக்கொண்டே) நீங்க இருக்கறபக்கம் வந்தப்போ நானு ஒணும்இண்ணு தும்பனே—மூக்கிலே தூள் போட்டுகினு — இந்தப் பக்கம் நீங்க ஒளிச்சிகினு இருக்கரைங்க இண்ணு நெனைச்சிங்க — இந்த தெரெயண்டே — போயி — "ஏம்மா! அவ்வளவு சொல்லியும் — அவள் படிக்கும் போது வந்து (மாணிக்க முதலியார் பேசுவதுபோல் ஏளனம் செய்கிறான்—மாணிக்க முதலியார் ஜோடில் லாமல் திடீரென்று பின்பக்கம் வந்து வேலைக்கார சபாபதியின் காதைப் பிடித்துக்கொள்கிறார். சபாபதி முதலியாரும் ஞானம்பாளும் பயந்து எழுந் திருக்கிறார்கள்)

மா. அப்புறம்?—ஏண்டா! இதுதானே நீ காவல்காக்கரது? —என்னெ ஏமாத்தபாத்தைங்களே—இப்போ யார் ஏமாந்தது ?

ஞா. மாமா! மாமா!—நீங்க கோவிச்சிக்காதைங்க — நானு அவரெ disturb பண்ணவரலே—அவருக்கு கணக்கு கொஞ்சம் weak ஆயிருக்குது — அதுக்காக அதை சொல்லிக் கொடுக்க வந்தேன்.

மா. சரிதாம்மா—நீங்க பேசினதை எல்லாம் கேட்டுகிணு இருந்தேன் — நான் வேண்டுவதெல்லாம் அவன் எப்படியாவது இந்த வருஷம் பரீட்சையில் pass பண்ணவேணும் என்பதுதான்.

ஞா. அதற்கு நான் உத்தரவாதம்—எப்படியாவது நான் கஷ்டப்பட்டு சொல்லிக்கொடுக்கரேன்.

மா. செய்யம்மா! தினம் சாயங்காலத்துலே வந்து ஒருமணி நேரம் teach பண்ணிவிட்டுப் போ.

வே-ச என்னுங்க! முன்னே பரிட்செ ஆவர வரைக்கும் வரக்கூடா தின்னீங்க — இப்போ நீங்களே சாயங் காலம் சாயங்காலம வரச்சொல்ரைங்களே!

மா. வாயெ மூடுடா! தடிக் கழுதெ!

(அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்துவிட்டுப் போகிறார்)

வே-ச. ஏ!—என்னண்ணாலும் மறுமகளும் புள்ளேயுமாச்சு —எனக்கு கன்னத்துலே அறையாச்சு!

(கன்னத்தைத் துடைத்துக் கொள்கிறான்)

காட்சி முடிகிறது

சபாபதி முதலியார் விஷம் சாப்பிட்டது.

V

முதல் அங்கம்—முதல் காட்சி

இடம்—நன்றாய் அலங்கரிக்கப்பட்ட ஓர் அறை.

காலம்—சாயங்காலம்.

சபாபதி முதலியார் ஆழ்ந்த யோசனையிலிருக்கிறார். வேலெக்கார சபாபதி அருகில் நிற்கிறான்.

ச-மு எம் பெண்சாதி pass பண்ரது நானு fail ஆபோரது இண்ணு—இதுக்கானு அவமான case என்னுபிருக்குது!

வே-ச. அது பரவாயில்லேப்பா, எனக்கானு எம்பெண் ஜாதி படிச்சி இருக்குது, அதுக்கு நானுஎன்ன வருத் தப்படரெனு என்னு? சந்தோஷமல்லவோ படரேன்.

வே-ச. அப்பப்பா! அப்படியானு நானுகூட செத்துப் பூடரேம்பா உன்னேடே! நீ செத்துபூடரது, நானு பொழச்சி இருக்கிறதா? (அதிலிருந்து இன்னொரு புள்ளி சாப்பிட்டுவிட்டு கட்டிலின் கீழே படுத்துக் கொள்கிருன்.)

ச-மு. என்னடா சபாபதி! மருந்தென்ன—திந்நீக்குதே?

வே-ச. அது—அந்த மருந்தெ — தித்திப்புலே — கலந்து கொடுத்திருக்காரு இண்ணு நெனேக்கரேன்—யாருக்கும் தெரியக்கூடாதிண்ணு.

ச-மு. என்னடா — சபாபதி — நானு — இன்னும் செத்து பூடலேயே!

வே-ச. இதுக்குள்ள—நீ செத்துபூடா மாட்டேப்பா—அந்த மருந்து வேலே செய்யரத்துக்கு— எத்தனிநாழி புடிக்குமோ? எத்தனி நாள் புடிககுமோ? (ஒருபுறமாக) எத்தனி வருஷம் புடிக்குமோ! (புட்டியிலிருந்து இன்னொரு புள்ளி சாப்பிடுகிறன் மறைவாக)

காட்சி முடிகிறது.

நான்காம் காட்சி

இடம்—சபாபதி முதலியார் வீட்டு வாயில்.

(ஒரு பெரிய மோடார்கார் வருகிறது; அதிலிருந்து கிருஷ்ணசாமி முதலியாரும், சபாபதி முதலியார் மனேவியும் விரைந்து இறங்கி உள்ளே போகிருர்கள்)

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி

இடம்—முதல் காட்சியின் இடம்.

சபாபதி முதலியாரும், வே-சபாபதியும் முன்போல் இருக்கிருர்கள்.

சபாபதி முதலியார் மனேவி ஞானம்பாளும் கிருஷ்ண சாமியும் விரைந்து வருகிருர்கள்.

ஞா. அத்தான்! உங்களே உயிருடன் காண்கிறேனே!

(வே-ச. கட்டிலின் கீழிருந்து மெல்ல வெளியே வருகிறான்.)

ஞா. அத்தான்! (மருந்து புட்டியைப் பார்த்து) இதென்ன! ஐயோ! ஏதாவது சாப்பிட்டு விட்டீர்களா என்ன!

கி. நான்போய் டாக்டரை உடனே அழைத்துக்கொண்டு வருகிறேன்! (வெளியே போகப் பார்க்கிறார்).

டாக்டர் வருகிறார்.

டா. வேண்டாம்! வேண்டாம்! இதோ நானே வந்து விட்டேன், ஒன்றும் பயப்படாதீர்கள். இதில் விஷம் ஒன்றுமில்லை. Poison இல்லை, பாயசம்தான்! நான் தான் இவரைத் தடுப்பதற்காக இதை ஏமாற்றி அனுப்பினேன்.

ச-மூ. அதுதான் தித்திச்சுது—நானு சந்தேகப்பட்டேன்.

வே-ச. ஆமாம்பா! எனக்குக்கூட அப்படித்தான் தோணுது.

ஞா. ஆபத்தினின்றும் அம்மட்டும் காத்தீர்களே டாக்டர். அத்தான்! இதென்ன வேலை! உங்களுக்கு சந்தோஷ சமாசாரமல்லவோ கொண்டுவந்திருக்கிறேன். நீங்கள் பாஸ் பண்ணிவிட்டீர்கள். Arithmetic-இல் நீங்கள் fail ஆனதை private-ஆக எங்கள் Principal தெரிவிக்க, நான் உடனே car-இல் அவுங்க வீட்டுக்குப் போய், அவர் பாதி sums correct-ஆ போட்டாரே எப்படி fail ஆயிருப்பார், answer paper-ஐ எடுத்துப் பாருங்கள் என்று பலவந்தித்தேன். அப்படியே அவர்கள் எடுத்துப் பார்த்தபோது, உங்கள் பேபரில் இரண்டு பக்கம் மார்க்குகளைக் கூட்ட மறந்துபோய் விட்டதை அறிந்து, apologise பண்ணி உடனே, அதை correct செய்து Chief Examiner-க்கு தெரிவித்தார்கள். எல்லாம் சரியாகிவிட்டது.

டா. உம்—பெண்சாதியாலே!

ஞா. டாக்டர்! உங்களாலே.

கி. ஸ்வாமியின் கருணையினாலே.

வே-ச. என்னாலே கூடங்கோ!

டா. ஆமாம் — அடேசபாபதி, அந்த பாய்சனே — பாயசமோ—பெரியபுட்டியிலே வாங்கிக்கொண்டு வந்தாயே, அத்தெ கொண்டா, எல்லோருமே சாப்பிடலாம்.

வே-ச. ஆமாங்க! (கீழே ஓடிப்போய் பாயசம் இருக்கும் ஒரு பெரிய புட்டியைக் கொண்டுவருகிறான் 4 தம்ளர்களுடன்)

வே-ச. ஆமாங்க! இந்தாங்க!

டா. சபாபதி முதலியார் பரீட்சை பாஸ் பண்ணினதற்காக நாம் எல்லோரும் சந்தோஷமாய் பாயசம் சாப்பிடுவோம்! ஹிப்! ஹிப்! ஹுரே!

(எல்லோரும் சாப்பிடுகின்றனர்)

காட்சி முடிகிறது.

ஆரும் காட்சி

இடம்—*வேலைக்கார சபாபதியின் விடுதி.*

வேலைக்கார சபாபதி சுவரோரம் தலைகீழாக நிற்கப் பார்க்கிறான்.

சிவகாமு வருகிறாள்.

சிவ. இதென்னது! இதென்னது! பயித்தியம் கியித்தியம் புடிச்சிப் போச்சா என்ன!

வே-ச. இல்லெடி! மூளெக்கி பலம் வர்ரத்துக் பாக்கரேன்.

சிவ. என்னது, மூளெக்கி பலம் வர்ரது!

வே-ச. பொம்மனாட்டி ஒனக்கு இதெல்லாம் தெரியாது— நான் சொல்ரேன் கேட்டுகோ! நேத்து பெரிய ஐயா இவனுக்கு மூளெயிலே மண்ணாங் கட்டிதான் இருக்குது! இண்ணு திட்டனாரே. நானு உடனே வயித்தியர் கிட்ட போயி — எம் மூளெயிலே இருக்க மண்ணாங்கட்டியே எடுத்தூட்டு—நல்ல மூளெயா வையுங்க இண்ணு கேட்டேன்-அதுக்கு அவர் அதெல்லாம் வேணாம்பா, உன் மூளெ பலமாகணுமிண்ணா, மூளெயிலே நல்ல ரத்தம் பாவணும் இண்ணு சொன்னாரு— அதுக்கோசரம் தலெகீழா நிண்ணா மூளெயிலே ரத்தம் நல்லா பரவும் இண்ணு தலெகீழா நிககப் பாக்கரேன்

சிவ. இதென்ன எழவா யிருக்குது! அந்த வயித்தியமல்லாம் வாணும்—நானு சொல்றபடி பாடம் கத்துங்க

—மூளெ சரியாபூடும் — நேத்து கத்துகொடுத்தனே அத்தே சொல்லுங்க பாக்கலாம்.

வே-ச. ஓடாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.

சிவ. ஓடாமலா!—உம்! அப்புறம் சொல்லுங்க.

வே-ச. ஒரு நாளும் பாடத்தைப் படிக்கவேண்டாம்.

சிவ. தென்னது! இது யார் சொல்லிக் கொடுத்தது?

வே-ச. ரெண்டாவது அடி மறந்து பூட்டுது.— அப்புறம் அப்பாவே போயி கேட்டேன் — அவர் சொல்லிக் கொடுத்தாரு.

சிவ. சரிதான்! உங்களுக்கு சரியான எஜமான் தான்! அப்புறம்.

வே-ச. அப்புறம் (தலையைச் சொறிந்துகொண்டு)—ஆம்! "மாமாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்!"

சிவ. (சிரிக்கிறாள்)

வே-ச. என்ன சிரிக்கரையே! கல்யாணமாயி உன்னே உங்க வூட்லே யிருந்து அழைச்சிகினு வரப்போ — எங்களே யெல்லாம் மறந்து பூடாதே அப்பா இண்ணு மாமா சொல்லலே?

சிவ. சாமி! சாமி! இதெல்லாம் போனு போறது—அந்த எழுத்துக்களெ எல்லாம் எழுதி படிச்சிகினிங்களா?

வே-ச. ஓ! நீ சொல்லிக் கொடுக்க மறந்துபூட்ட ரெண்டு எழுத்து கூட கத்துகனனே?

சிவ. நான் சொல்லிக் கொடுக்க மறந்து பூட்ட ரெண்டு எழுத்தென்ன? அல்லாம் சொல்லிக் கொடுத்தேனே!

வே-ச சொல்லட்டுமா!—அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ, ஐ ஐ, ஒ ஓ, ஔ, ஔ.

சிவ. இதென்னது! ஐ ஐ! என்ன? ஔ ஔ என்ன? ஒரு ஐ, ஒரு ஔ தான்.

வே-ச. தப்பு — மத்ததுக்களுக்கெல்லாம் ரெண்டிருக்கும் போது இதுகளுக்கு மாத்திரம் ரெண்டுஏன் இல்லே?

சிவ இதுயார் சொல்லிக் கொடுத்தது—உங்கஅப்பாவோ?

வே-ச. ஆமாம்.

சிவ. அத்தெ எப்படி எழுதாது, அத்தையும் சொல்லிக் கொடுத்தாரா ?

வே-ச. ஓஓ!

சிவ. எதோ—எழுதிக் காட்டுங்க பாக்கலாம்.

வே-ச (சுவற்றில் கரியால் எழுதுகிறன்)

"ஐ ஐ — — ஔ ஔ"

இது சின்ன ஐ, இது பெரிய ஐ இது சின்ன ஔ இது பெரிய ஔ — இழுககணும வாலே.

சிவ. (சிரிக்கிறள்)

வே-ச. சிரிக்கிறது அப்புறம் இருக்கட்டும். நீ சொல்லிக் கொடுக்காததை யெல்லாம் சரியா படிச்சாக்கா, எனக்கு பலஹாரம் என்னமாறு பண்ணிக கொடுக கரேன் இன்னையே—எனக்கு பாத மல்வா பண்ணி கொடு.

சிவ. பாதம் அல்வா எங்கிருந்து வந்துது !

வே-ச. அப்பா சொன்னரே — மூளெக்கி பலம் வரணு மின்னு பாதம் அல்வா சாப்பிடணும் இன்னு.

சிவ. அவரு பாதம் அல்வா சாப்பிட்டு தான் இப்படி அவருக்கு மூளெயிலே பலம் வந்துதே ! போதும். வாங்க சாப்பாட்டுக்கு.

காட்சி முடிகிறது.